# தணிக்கைமுறையை அரசு உடன் நீக்கவேண்டும்

## லண்டன் அமைப்பு கோருகிறது

(லண்டன்)
இலங்கையில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு நிலைமை தொடர்பான செய்திகள் மீது அரசு விதித்துள்ள தடைகளை உடனடியாக அகற்றுமாறு லண்டனிலிருந்து இயங்கும் 'ஆட்டிக்கிள்-19' என்ற சர்வதேச அமைப்பு இலங்கை அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து இந்தஅமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில், செய்தித் தணிக்கையின் விளைவாக இலங்கையில் நிலவும் பிரச்சினையின் தன்மை பற்றியும் அது எந்தப் போக்கில் செல்கிறது என்பது பற்றியும் அறியும்
[5ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 6-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 11 இதழ் 236
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28 09 1995

## வெளிநாட்டு தூதர்கள் அரசுக்கு பாராட்டு

(கொழும்பு)
இராணுவச் செய்திகள் வெளியிடுவதில் வெளிநாட்டு பத்திரிகையாளருக்கு இருந்த தணிக்கை முறையை அரசு விலக்கியதை பல வெளிநாட்டுத் தூதர்கள் பாராட்டியுள்ளனர்

யுத்தச் செய்திகள் வெளியிடுவதில் உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கும் வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களுக்கும் அரசாங்கம் முதலில் தணிக்கை முறையை அமுல் செய்திருந்தது

எனினும் வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்த பலத்த கண்டனங்களையடுத்து அந்த செய்தி ஸ்தாபனங்களுக்கான தணிக்கையை அரசு நீக்கினாலும் உள்
(5ம் பக்கம் பார்க்க)

# ★ கல்விக் கூடங்கள் மீதான அரசின் அட்டூழியத்தைஎதிர்த்து

# பள்ளிச் சிறார்கள் இன்று பேரணி

## நான்கு இடங்களில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
கல்விக்கூடங்கள் மீது நடாத்தப்படும் குண்டு வீச்சு, ஷெல் வீச்சுத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆரம்ப பாடசாலை மாணவர்களின் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணி முதல் நான்கு இடங்களில் நடைபெறவுள்ளன.
[5ம் பக்கம் பார்க்க]

## யாழ். குடா தாக்குதல் நடக்குமா? இராணுவ தரப்பில் குழப்பம்

(கொழும்பு)
யாழ். குடாவில் பருவ மழைக்கு முன் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது சாத்தியமாகுமா என்பது குறித்து படையினர் மத்தியில் குழப்பம் நிலவுவதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது.

அண்மையில் அடுத்தடுத்து கடற்படைக் கப்பல்கள் பல புலிகளினால் தகர்க்கப்பட்டதாலும் அன்ரனோவ் விமானம் வீழ்ந்து நொருங்கியதாலும்
(5ம் பக்கம் பார்க்க)

## அரசின் தீர்வுத் திட்டத்தில் மேலும் பல அம்சங்களுக்கு வெட்டு

[கொழும்பு]
இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தில் மேலும் பல அம்சங்கள் குறைக்கப்படவுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

கடந்த ஞாயிறு கண்டியில் ஆயிரக்கணக்கான பௌத்த பிக்குகள சந்திரிகாவின் அரசியல் தீர்வுத்திட்ட ஆலோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் எதிர்ப்புப் பேரணியை நடத்தியதையடுத்தே அரசு தனது 'தீர்வு யோசனையில் சிலவற்றை தளர்த்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வுகளை வழங்குதல் நாட்
(5ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். குடாவில் வாழும் 8 லட்சம் 'தமிழரை பாதுகாக்காவிட்டாலும் அவர்களை அரசு அழிக்கக் கூடாது

(லண்டன்)
யாழ்ப்பாணத்தில் வாழும் எட்டு லட்சம் மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையேஎனவும் பாதுகாப்பு பணியைச் செய்யாவிட்டாலும் அவர்களுக்கு எதிரான வகையில்செயற்படாமலிருக்க வேண்டுமென லண்டனிலுள்ள மனித உரிமைகள் கழகம் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பை கண்காணிக்க வேண்டியது அரசின் கடமையாகும். இராணுவ தாக்குதல்களை அரசு நேரடியாக கண்டிக்காவிட்டாலும் அவர்களின் பாதுகாப்பிற்கு அரசு பொறுப்பேற்க வேண்டுமென சர்வதேசமன்னிப்புச்சபையும், மனிதஉரிமைக்கழகமும் கோரியுள்ளன.
(5ம் பக்கம் பார்க்க)

## நாளைய பேரணி பல்கலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
அரச படைகள் பாடசாலை மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக மேற்கொள்ளும் சகல தாக்குதல்களையும் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை காலை பத்துமணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்திலிருந்து மாபெரும் கண்
(5ம் பக்கம் பார்க்க)

## அன்ரனோவின் உள்ளே சடலங்கள் கண்டுபிடிப்பு

[கொழும்பு]
விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கிய அன்ரனோ விமானத்துக்குள் பல சடலங்கள் இருப்பது நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விமானத்தை கடலிலிருந்து மீட்டெடுக்கும் பணியில் தற்போது ஈடுபட்
(5ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கேட்கின்றனர்

[கொழும்பு]
தென்பகுதியிலுள்ள பத்திரிகையாளர்கள் அரசிடம் பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது.

அரசு அதிகாரிகளிடமிருந்து தங்களுக்கு எதிர்ப்புகள் எழலாம் என்பதாலேயே தங்க
(5ம் பக்கம் பார்க்க

## இந்திய அமைச்சரின் ஹெலி பாகிஸ்தானுக்குள் சென்றது

(புதுடில்லி)
இந்தியாவின் மத்திய மின்சக்திதுறை அமைச்சர் என். ரி. பி. சால்வே பயணம் செய்தஇராணுவஹெலிகொப்டர் திசைமாறி பாகிஸ்தான் எல்லைக்குள் பிரவேசித்த போதும் அது சுடப்படாததினால் தெய்வாதீனமாக அமைச்சர் உயிர்தப்பினர்.

இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் காஷ்மீருக்கு அமைச்சர் சென்றுகொண்டிருக்கையிலேயே இவர் பயணம் செய்த இராணுவ ஹெலி திசைமாறி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஆஷாத் காஷ்மீர் பகுதிக்கு மேலால் சுமார் 13 நிமிடங்கள் பறந்து திரிந்த போதும் இது பாகிஸ்தான் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்படவில்லை.

மேற்படி இரு நாட்டு எல்லைகளுக்கு மேலால் மற்ற நாட்டு இராணுவ விமானங்கள் பறந்தால் அதை உடனே சுட்டு
(5ம் பக்கம் பார்க்க)

## படகுச்சேவை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை முதல் வழமையான நாட்களில் வழமையான நேரத்தில் நடைபெறுமென விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். (இ)

# அன்ரனேவின் சிதைவுகள் அடுத்த வாரமளவில் மீட்கத்திட்டம்

(கொழும்பு)

அனர்த்தத்திற்குள்ளான அன்ரனேவ் 32 விமானத்தின் சிதைவுகளை அடுத்த வாரமளவில் மீட்பதற்கு தாங்கள் திட்டமிட்டு வருவதாக மாஸ்டர் டைவேர்ஸ் கொம்பனி தலைவர் தெரிவித்துள்ளார்.

மீட்பு நடவடிக்கைகளுக்கென திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க பரீட்சார்த்த வேலைகள் திருப்திகரமாக முடிவடைந்துள்ளன.

விமானத்தின் பலபகுதிகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

விசேட கமராவைப்பயன்படுத்தி நீருக்கு அடியில் விமானப்பகுதிகளை பிடித்த படங்களை நுணுக்கமாக ஆராய்ந்தபின்னர் இது உறுதி செய்யப்பட்டது என்று நிபு

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### தகரப்பந்தல் விற்பனைக்கு

30 அடி புதிய மணப்பந்தல் சோடனைப் பொருட்களுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: வ. வே. தியானந்தராசக்குருக்கள், நெல்லண்டை, பருத்தித்துறை. (சி-1680)

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் IC, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனு, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற வகைகளையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம். அன்ரனு பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)


## 1988 - 90-ம் ஆண்டு காலப்பகுதியில்

# உலக அளவில் 175 நீதிபதிகள் அவமானப்படுத்தப்பட்டுள்ளனர்

(ரொறன்ரோ)

1988-90ம் ஆண்டு காலப்பகுதிகளில் உலக அளவில் 145 நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் அவமதிப்பு மற்றும் கொலைகளுக்கு இலக்காகியுள்ளனர் என கனடாவில் நடைபெறும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மாநாட்டில்தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறைகளுக்கு எதிராக அரசாங்கங்களின் தலையீடு மற்றும் பிறசக்திகளின் குறுக்கீடுகள் அதிகரிப்பதை அடுத்து சர்வதேச கண்காணிப்பு குழு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை இம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் உலகின் பல நாடுகளிலுமுள்ள நீதிபதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

உலகின் நீதித்துறை நடைமுறைகள் குறித்து இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச சபைச் செயலாளர் பிரிவில் தற்போது பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஆகஸ்ட்மாதக் கொடுப்பனவு இப்பகுதியில் உள்ள சகல தபால் கந்தோர்களிலும் வழங்கப்படுகின்றது.

இத்தருமப் பணத்தைப் பெறுபவர் தத்தமது பகுதியில் உள்ள தபாலகங்களில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

## மக்கள் இடம்பெயர்வு

[அல்வாய்]

வடமராட்சி பகுதியில் விமானகுண்டு வீச்சு, ஷெல் தாக்குதலால சந்தா தோட்டம் பகுதியிலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து சாவகச்சேரி, கல்வயல் மட்டுவில் ஆகிய இடங்களுக்கு சென்றுள்ளதாக தெரியவருகின்றது. -59

# சந்திரசுவாமி நடவடிக்கை குறித்து இந்தியா தூரவிலகியிருக்கிறது

(புதுடில்லி)

இந்திய அரசாங்கம் புகழ்பெற்ற சந்திரசுவாமியின் நடவடிக்கையை குறித்து வெளியான செய்திகளிலிருந்து தூரவிலகியிருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1993ம் ஆண்டில் பம்பாயில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு இந்த சுவாமி சம்பந்தப்பட்டிருப்பாரானால் அவர் கைது செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய புலனாய்வு பிரிவு அதிகாரிகளையும் பல அரசியல் தலைவர்களையும் சீடர்களாக கொண்டுள்ள சந்திர சுவாமியின் கடவுச் சீட்டைக் கைப்பற்றியதை அடுத்து சுவாமி பற்றிய செய்திகள் வெளியாகின.

பம்பாயில் 300 பேரைப் பலி கொண்ட குண்டுவெடிப்பு சம்பவங்கள் தொடர்பாகவே இந்தச் சுவாமியின் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

இதற்கிடையில் பிரதமர் நரசிம்மராவுடனும் ஏனைய இந்திய தலைவர்களுடனும் தனக்கு தனிப்பட்ட தொடர்புகள் உண்டு என்று சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

எலிசபெத் டெய்லர் புருனையின் சுல்தான், சவூதி அரேபியா கோடீஸ்வரரான அல்லாண்ட் கசோக்கி, தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஆகியோரை சுவாமிகள் சீடர்களாக கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறு வருட காலத்தில் சுமார் 100 நாடுகளுக்கு சுவாமிகள் விஜயம் செய்துள்ளார் என்று மத்திய புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுவாமிகள் இந்தியாவிலிருந்து புறப்பட்டமை ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு விஜயம் செய்தமை ஆகியவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகளை புலனாய்வுத் துறையினர் தற்பொழுது ஆராய்ந்து வருகின்றனர். -ரி

## உலகச் செய்திகள்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-09-28**

வியாழன் இரவு

8-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
8-10 நோய் தீர்க்கும் மூலிகைகள்
8-20 உழைப்போம் உயர்வோம — கைத்தொழில் கற்றுக் கவலைக்கு எமக்கில்லை — உரைச்சித்திரம்
8-30 செய்திகள்
8-40 மொழியும் வாழ்வும் (27)
8-50 எங்களின் தேசம் - (33)

**1995-09-29**

வெள்ளி காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 மணியாரம்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணி வரை தாயகப் பாடல்கள்

## தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-09-28**

வியாழன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதுயவை
5-15 மழலைகளுக்காக
5-30 இசையும் கதையும்
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
6-02 பொன் விளையும் பூமி
6-10 செய்திகள்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 கேள்வி பதில்

# என்மீது களங்கம் ஏற்படுத்த தீயசக்திகள் முயற்சி!

## ஜெயலலிதா கூறுகிருர்

(சென்னை)

தம்மீதும் தமது அரசு மீதும் களங்கம் ஏற்படுத்தும் நோக்குடன் சில சக்திகளும், பத்திரிகைளும் செயற்பட்டு வருகின்றன எனத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் அண்மையில் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர்தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் இம்மாதம் 7ம் திகதி நடைபெற்ற தமது வளர்ப்பு மகனின் திருமணச்செலவு பற்றிய கணக்கு விபரங்கள் சம்பந்தப்பட்ட துறையினருக்கு தேவையான நேரத்தில் வழங்கப்படும். இச்சக்திகள் திருமணம் பற்றிய செய்திகளை மிகைப்படுத்துகின்றன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இத்திருமணச் செலவு குறித்து முதல்வர் ஜெயலலிதா, நடிகர்திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருக்கு வருமான வரித்துறையினர் நோட்டீஸ் அனுப்பியுள்ளதும் தெரிந்ததே. க-சி

## யாழ். தாக்குதல்

# படைக்கு பின்னடைவாம்

[கொழும்பு]

இராணுவத்தின் தற்போதைய நிலவரத்தின்படி யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது என்று செய்தியாளர் இமால் ஜயசிங்க பி. பி. ஸி சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்பது மிகக் கடினமானதொரு முயற்சியாகும்- அன்ரனோவ் விமானம் நொருங்கி வீழ்ந்தமை, டோரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டமையால் வடக்கே பொருட்களை கொண்டு செல்வதில் இராணுவம் கஷ்டத்தை எதிர்நோக்குகிறது.

எனினும் சில வேளைகளில் சிறு சிறு இராணுவ நடவடிக்கைகளை இப்பகுதியில் மேற்கொள்ளக் கூடும். யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முயல்வதால் இராணுவத்திற்கு பின்னடைவுகள் ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார். ம-சி

## ஜம்மு - காஷ்மீரில்

# கண்ணி வெடியில் சிக்கி 4 படையினர் பலி

(லக்னோ)

ஜம்மு காஷ்மீர் பகுதியில் இராணுவ ட்ரக்வண்டி ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில் இராணுவ உயர் அதிகாரி உட்பட படையினர் மூவர் ஸ்தலத்தில் கொல்லப் பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

முஸ்லீம் தீவிர வாதிகள் புதைத்து வைத்த நிலக்கண்ணிவெடியில் சிக்கிய இராணுவத்தினரின் ஜீப்வண்டி சேதமாகியது.

கண்ணிவெடித் தாக்கு தலை அடுத்து ட்ரக்கின் மீது துப்பாக்கிச் சூடும் நடாத்தப்பட்டுள்ளது. க-சி

## அமெரிக்க விமானம் நொருங்கியது

# 13 பேர் உயிரிழப்பு

[வாஷிங்டன்]

அமெரிக்க விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 13 பேர் உயிரிழந்தனர் 11 பேரைக் காணவில்லை

மியாமி விமானத்தளத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்க கண்காணிப்பு பிரிவிலுள்ள விமானமே புறப்பட்டு சில நிமிடங்களில் தீப்பற்றிஎரிந்து வீழ்ந்து நொருங்கியது.

இவ்விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. விபத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கான மீட்புப் பணியும் விபத்திற்கான காரணம் பற்றி அறியவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ர-சி


# அறிவித்தல்

## குரக்கன் கொள்வனவு

1995-ம் ஆண்டில் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் இம்முறையும் பசுமை வேளாண் சேவையால் ஒரு கிலோ திட்டிய குரக்கன் ரூபா 26/- வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது குரக்கன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது குரக்கனை பின்வரும் இடங்களில் விற்பனை செய்யலாம்.

**வலிகாமம்**

பசுமை வேளாண் சேவை — நீர்வேலி
பசுமை வேளாண் சேவை — உடுவில்
பசுமை வேளாண் சேவை — சண்டிலிப்பாய்
பசுமை வேளாண் சேவை — கோண்டாவில்

**தென்மராட்சி**

பசுமை வேளாண் சேவை — கைதடி
பசுமை வேளாண் சேவை — சாவகச்சேரி
பசுமை வேளாண் சேவை — கொடிகாமம்
பசுமை வேளாண் சேவை — பளை

**வடமராட்சி**

பசுமை வேளாண் சேவை — பருத்தித்துறை

(ஏ-5335)

### மணிவாக்கு

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்தநாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது.

சுவாமி விவேகானந்தர்

# வருடாந்தம் 500 இல. இளைஞருக்கு ஜப்பானில் தொழில் பயிற்சி

(கொழும்பு)

வருடாந்தம் 500 இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதுதொடர்பாக ஒப்பந்தம் ஒன்று இலங்கை அரசுக்கும் ஜப்பானுக்குமிடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இலத்திரனியல், கொம்பியூட்டர் உட்பட நவீன தொழிற்துறைகளில் இப்பயிற்சிகள் வழங்கப்படும்.

ஜப்பானியக்குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து இதுதொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது. இக்குழுவினர் இலங்கையுடன் இது குறித்து உடன்பாட்டில் கைச்சாத்திடுவர்.

ஜப்பானில் தொழில் பயிற்சி பெற்று நாடு திரும்பும் இளைஞர்களுக்கு இலங்கையில் தமது தொழில்களை விஸ்தரிப்பு செய்வதற்கான உதவிகளும் ஒத்துழைப்பும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. -ரி

## நமது நோக்கு

### கப்பல் திசை திருப்பல்

தமிழ் மக்கள் பட்டினி கிடந்தால் என்ன பட்டினியால் மடிந்தால் என்ன அரசுக்கு அதுபற்றி அக்கறையில்லை; சிங்கள மக்களுக்கு எதுவித தட்டுப்பாடுமில்லாமல் உணவுப் பொருட்களை வழங்குவதில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

குடாநாட்டுக்கு மா ஏற்றி வருவதற்காக பெருந்தொகை பணச் செலவில் யாழ். அரச அதிபரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''ஹெந்தல'' கப்பல் திருமலையிலிருந்து இரண்டாவது தடவையாக மீண்டும் கொழும்புக்கு மா ஏற்றிச் செல்ல இருக்கிறது. வாடகைக்கு அமர்த்தப்பட்ட பின் ஒரு தடவைதான் வடபகுதிக்கு இந்தக் கப்பல் மா கொண்டு வந்ததென்பது குறிப்பிடப்படவேண்டும் இரண்டாவது தடவையாக இக்கப்பல் மாவை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு வர இருந்தவேளையில் கொழும்பில் மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து திடீரென கப்பல் கொழும்புக்கு திருப்பப்பட்டது. தற்போது இக்கப்பல் மீண்டும் திருமலை சென்று மா ஏற்றிக்கொண்டு கொழும்பிற்குச் செல்ல இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

மழைக்காலத்துக்கு முன்னர் போதியளவு மாவை யாழ் மாவட்டத்துக்கு எடுத்துவந்து களஞ்சியப்படுத்தும் நோக்கிலேயே பெருந்தொகைச் செலவில் யாழ். அரச அதிபர் கப்பலை வாடகைக்கு அமர்த்தியிருந்தார். குடாநாட்டில் மாவுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ள இந்நேரத்திலும் இங்கு மாவை ஏற்றிச்செல்வதற்கான பணிப்புரையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஹெந்தலக் கப்பலுக்கு வழங்கவில்லை. இவ்வமைச்சுக்கு குடாநாட்டின் மீது இருக்கும் அக்கறை ஏற்கனவே தெரிந்த ஒன்றாகும். உணவுப்பொருட்களை குடாநாட்டிற்கு அனுப்பாது தேவையற்ற இழுத்தடிப்புகளைச் செய்து சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவினருடனும் முரண்பட்டுக்கொண்டிருந்தது எல்லோருக்கும் தெரிந்ததே.

இந்த நிலையில் தமிழ் மக்களை இன்னமும் தன் பிரஜைகள் என்று கூறிக்கொள்ளும் சிறிலங்கா அரசு அவர்களை மாற்றாந்தாய் கண்ணோடு பார்ப்பதையும் நடத்துவதையும் வெளி உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய பொறுப்பு தமிழர்களைப் பொறுத்ததாகும். நாளை நாகர்கோவில் பள்ளிச்சிறார்களையும் பொதுமக்களையும் சிறிலங்கா அரசு குண்டுவீசியும், ஷெல் அடித்தும் படுகொலை செய்ததை வெளி உலகுக்குக்கு பகிரங்கப்படுத்துவதற்காக நடைபெறவிருக்கும் வெகுஜனப் பேரணியின் போது சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு உணவுப்பொருட்களையும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பாமை அல்லது காலதாமதம் செய்வது போன்றவற்றுக்கு எதிராகவும் குரல் எழுப்பவேண்டும்.

உணவுப்பொருட்களை அனுப்பாவிட்டாலும் கூட எங்கள் பிரதேசங்களில் நாமே பயிர் செய்துகொள்வதற்குத் தேவையான உரவகைகளை என்றாலும் அரசு அனுப்புமோ என்றால் அதையும் அரசு தடைசெய்துள்ளது. இதற்கென்ன பரிகாரம்? எமது பிரதேசங்களில் வளமுள்ள நிலங்கள் உள்ளன. போதிய நீர்ப்பாசன வசதி கொண்ட நிலங்களும் உள்ளன வன்னிப்பிரதேசத்தில் நிலமும் தண்ணீரும் விவசாயிகளை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றது. விவசாயிகள் அவற்றை பாவித்து எமது உணவுப் பொருட்களில் எமது சுய தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

# நாளொன்றுக்கு ஆறரைக் கோடிரூபா போருக்கு செலவு செய்யப்படுகிறது

## பிரதமர் சிறிமா கவலை

[கொழும்பு]

நாளொன்றுக்கு ஆறரைக் கோடி ரூபா போருக்கு செலவு செய்யப்படுவதாக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கவலை தெரிவித்துள்ளார்.

தனது கணவரின் 36-வது சிராத்த தின வைபவங்களில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

போர் தொடருமானால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சரிந்துவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தும் வரை இலங்கைஅரசு செலவிடவேண்டிய இராணுவச் செலவு மிக அதிகமானது.

ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டம் இனவாதப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும். இத்திட்டம் இலங்கையின் தேசியவாதத்தைத் தவிடுபொடியாக்கும் என்ற அச்சம் தேவையற்றது.

அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் மூலம் இலங்கையின் ஐக்கியம் பாதுகாக்கப்படுமே அன்றி பிளவுபடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார் -ரி

## வருடாந்த விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபையின் ஆதீன வருடாந்த விழா 30ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையின் ஆதீனத்தில்பேராயர் அதிவண கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வண. ஜ. வசந்தகுமார். வண. ஜ. ஜெயச்சந்திரன், வண. அந்தனி சவரிமுத்து ஆகிய மூவரையும் திருநிலைப்படுத்தவுள்ளார்.

139-சி

## எயிட்ஸ் பற்றி கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யுனிசெவ் ஆதரவுடன்யாழ். மாநகராட்சிமன்றம்நடாத்தும் நகர்ப்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் எயிட்ஸ் நோய் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், யாழ். மாநகராட்சி மன்றசுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ. தெய்வேந்திரன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் திரு. சு. இராசதுரை, தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் திரு. த. இலங்கேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

-162

## ஷெல்லுக்கு அஞ்சி ஓடியவர் விபத்தில் சிக்கினர்

(நெல்லியடி)

குண்டு வீச்சு விமானத் தாக்குதலுக்கு அஞ்சி மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற ஆசிரியர் ஒருவர் விபத்தில் சிக்கியமையால் கால் முறிந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாகர்கோவில் மகா வித்தியாலய ஆசிரியரான மந்திகை காந்தியூரைச் சேர்ந்த ஒரு சு. செல்வநாயகம் (வயது 33) என்பவரே கால் முறிந்தவராவர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை ந.பகல் 1-30 மணியவில் வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இடம் பெற்றுள்ளது. 160-சி

## இடம்பெயர்ந்தவர் வீட்டில் திருட்டு

(நெல்லியடி)

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி இடம் பெயர்ந்தவரின் வீட்டினுள் கதவு பிரித்து உட்புகுந்த இனந்தெரியாத திருடர்கள் அங்கிருந்து சமையல் பொருட்கள் முதல் வானொலி, உடுபிடவைகள் வரை சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு புலோலி வட கிழக்கு உத்திராவத்தையில், ஆறுகந்தையா என்பவரின் வீட்டில் நிகழ்ந்துள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை தமிழீழ காவல் பணிமனையில் புகாரிடப்பட்டுள்ளது. -160

## மருந்து விசிறப்பட்டது

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் புக்காரா குண்டு வீச்சு விமானம் தாக்குதல் செய்த பகுதிகளில் தொற்று நோயைத் தடுக்கும் வகையில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் தொற்று நீக்கி மருந்துகள் விசிறப்பட்டு வருகின்றன.

இதேவேளை இப்பகுதிகளிலுள்ள பல கிணறுகளுக்கும் குளோறின் மருந்து ஊற்றப்பட்டுள்ளது. 160

## உலர் உணவு விநியோகம்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற எறிகணைவீச்சு, புக்காரா தாக்குதலில் இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தில் உள்ள கட்டைவேலி ஆலய பகுதியில் வைத்து இரு நாட்களுக்கான உலர் உணவு வழங்கப்பட்டுள்ளது. 160

# 'தலைவர் பிரபாகரனால் தமிழினத்துக்கு பெருமை'

(நெல்லியடி)

'தலைவர் பிரபாகரன் என்று சொல்வதானால் எமது தமிழினம் பெருமையடைகின்றது. அவரின் ஒவ்வொரு வாக்கும் எமக்கு வேதவாக்காகும்'

இவ்வாறு தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஊர்காப்பு கழக அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடலில் பேசிய கலை பண்பாட்டுக்கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; நெருக்கடியான சூழலை எதிர்நோக்கும் நாம் அவற்றை உடைத்தெறிய துணியவேண்டும். விடுதலைப் போராட்டத்தை நழுவ விடாது இப் போராட்டத்தில் நாம் அனைவரும் அணி திரளவேண்டும். கடந்த காலங்களில் எம்மால் அமைக்கப்பட்ட சிற்றூரவை, வட்டவையில் சிலா தன்னிச்சையாக நடந்து கொண்டமையால் அவைகள் எம்மால் கலைக்கப்பட்டு, இன்று ஊர்க்காப்புக் கழகம் என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளோம்.

எமது விடுதலைப் போராட்டம் மிக விரைவில் வெற்றி அடைவதற்காக, எமது வேலைச் சுமைகளை உங்களுக்கு பகிர்ந்தளிக்கிறோம் என்றும் கூறினர். 160-ரி

## துணிவு கொள்! வலிமை கொள்!!

சூரியனை எழுப்பிவிட்டு
சுமந்தோரை வசுலுழுது
நீரிறைத்த பேரன்தான் நிலமாண்டான்
வேரிறுகி
நிற்காத மரம் நிழலை
நிச்சயமாய்க் கொடுக்காது
எப்போதுமே துணிவு
கொள்.

தடுப்பைக் கரம் வலித்து
திரண்டிருந்த தோளன்தான்
தடுப்பைக் கடந்தாழி நீராண்டான்
படித்திடுவாய்
அடுப்பின் சிறுசாம்பர்
அச்சமின்றிப் பெருங்காற்றை
தடுத்திடுமோ நீ வலிமை
கொள்.

— மதவடிச்சித்தர்

# "உலகத் தமிழர்கள் விழிப்புடன் செயல்பட்டால் சந்திரிகாவின் செய்தித் தணிக்கை தவிடுபொடியாகும்"

உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தி நிருபர்கள் வடபகுதிப் போர் பிரதேசங்களுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில் வலிகாமம் மேற்கில் குதித்துப் பாயும் இராணுவ நடவடிக்கையில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் ஈடுபட்டிருந்த வேளையில் அப்பாவிப் பொதுமக்கள் மீது பொதுப் படையாகப் பரவலாகவும் நவாலித் தேவாலயச் சூழலில் வைத்து புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் குறிப்பாகவும் நிகழ்த்திய படுகொலைகளை ஸ்ரீலங்கா அரசு முதலில் மூடி மறைக்கவே எத்தனித்திருந்தது.

ஆயினும், செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசியக் குழுவின் ஜெனிவாவில் இருக்கும் தலைமையகம் அதனை உறுதி செய்திருந்தது.

தற்போதோ வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் குறித்த செய்திகளுக்கான தணிக்கையை உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் அனைவற்றிற்கும் மொத்தமாக அறிவித்து விட்டு பலாலியில் இருந்தே ஆட்லறிச் ஷெல் தாக்குதல்களாலும், புக்காரா விமானங்களின் வான் தாக்குதலாலும் வடமராட்சியில் பாடசாலை மாணவர் அநேகர் உள்ளடங்கப் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளை அரசசார்பற்ற சர்வதேசிய தொண்டர் நிறுவனமான 'Medicine sans Frontier' [எல்லைகள் கடந்த வைத்திய சேவை] பாரிஸ் நகரில் இருக்கும் அதன் தலைமையக வாயிலாக பாருக்கு அம்பலப்படுத்தியுள்ளது.

## நவாலிப் படுகொலைகள்

வலிகாமம் மேற்கில் நவாலித் தேவாலயம் மீது நிகழ்த்தப்பட்ட குண்டு வீச்சை முதலில் இருட்டடிப்புச் செய்தும் பின் மறுத்தும் வந்த அரசு செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசிய கிளை ஜெனிவாவில் இருக்கும் அதன் தலைமையகத்தில் இருந்து உறுதி செய்ததும், ராஜாங்கத் தலைவியான சந்திரிகாவைக் கலந்து கொள்ளாது அச் செய்தியை உலகுக்கு அறிவித்திருந்தமைக்காக அதன் மீது வக்கணையான வார்த்தைகளால் கண்டனம் தெரிவித்திருந்தது ஸ்ரீலங்கா அரசு. இத் தீவின் தேசிய மொழிகளாகிய தமிழோ, சிங்களமோ பேசத் தெரிந்துகொண்டிராத அதன் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தலைநகர் கொழும்பில் உள்ள மேற்படி சர்வதேசிய சங்கத்தின் பிரதிநிதியைத் தமது பணியகத்துக்கு அழைத்து அச் செய்தியை உறுதிப்படுத்தியமைக்காக அவரைக் கடிந்துகொண்டும் இருந்தார். மேற்படி உண்மை நிகழ்வுகளை உறுதி செய்தமைக்காக ஸ்ரீலங்காவின் தொடர்பு சாதனங்களும், பௌத்த நிறுவனங்களும் கூட கண்டனம் தெரிவித்திருந்ததுடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசியக் குழுவை நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனவும் தீவிரமாக வலியுறுத்தத் தலைப்பட்டன.

வலிகாமம் மேற்கில் நடாத்தப்பட்ட குதித்து முன்னேறும் இராணுவ நடவடிக்கையின் போதோ அன்றேல் அது நடந்து முடிந்த கையோடோ சர்வதேச செய்தி ஊடகங்களின் பிரதிநிதிகள் வடக்கே சென்று செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் நவாலி தேவாலய வளாகத்தில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளை உறுதி செய்து கொள்ளுவதில், வடபகுதிச் செய்திகளுக்கு எப்போதும் பாதுகாப்புப் படை அதிகாரிகளின் தகவலையே நம்ப வேண்டிய நிலையில் இருக்கும் குடியரசுத் தலைவருக்கு அதிக சிரமம் இருக்காது என்று வடபகுதிஆயர் குரல்கொடுத்திருந்தமை இங்கு நினைவுகூரத் தக்கதே.

## மாணவர் படுகொலை

இப்போதும் வடமராட்சிப் பள்ளிச் சிறார்களின் படுகொலைகளை பாரிஸ் நகரைத் தலைமையகமாகக்கொண்ட சர்வதேசிய தொண்டர் நிறுவனமான 'எல்லைகளுக்கு அப்பால் வைத்திய சேவை' உறுதி செய்து கொண்டதும், பிரான்ஸ் நாட்டின் செய்தி ஊடகங்கள் அனைத்தும் அச்செய்திக்குப் பரவலாக முக்கியத்துவம்தந்து செய்தி வெளியிட்டுள்ளன! இங்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசிய குழு மீது கண்டனம் தெரிவித்தது போன்று நடந்துகொள்ள சந்திரிகா ஆட்சியினால் முடியவில்லை, இதற்கு தனிப்பட்ட முறையில் பிரான்ஸ் நாட்டில் அவருக்கு இருந்துவரும் செல்வாக்கு பங்கப்படாது காப்பாற்றவேண்டுமெனும் அவரது முனைப்பே காரணமாக இருக்கக்கூடும்.

ஆகவேதான் வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் குறித்த வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களுக்கான தணிக்கையைஇப்போது தாம் விலக்கியிருப்பதாக அவர் அறிவித்துள்ளார். இத்தடை நீக்கப்பட்ட போதும், யுத்தப் பிரதேசத்திற்கு மேற்படி செய்தி ஊடகங்கள் தமது பிரதிநிதிகளை அனுப்ப அனுமதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டிருக்கும் நிலையில் தேசிய செய்தி ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் செய்தித் தணிக்கை அவற்றையும் பாதிக்கவே செய்யும். இது சந்திரிகா அம்மையாரின் நரித்தந்திரமேயன்றி வேறல்ல! உள்நாட்டில் செய்தித் தணிக்கை உண்மைச் செய்திகளைப் பெற்றுக்கொள்வதில் வெளிநாட்டு செய்தி ஊடகங்களையும்பாதிக்கவே செய்யும்.

## நூலக எரிப்பு

செய்தித்தணிக்கை விதிக்கப்படாத நிலையில் குடாநாட்டில் வெளியிடப்பட்ட ஒரே தினசரியான 'ஈழநாடு' பத்திரிகையையும் யாழ் பொது நூலகத்துடன் சேர்த்து சமகாலத்தில் தீக்கிரையாக்கி, அதன்வாயிலாகவே யாழ். பொதுநூலகம் தீக்கிரையாக்கப்பட்ட செய்தி கொழும்புப் பத்திரிகைகளுக்கும், ஏனையசர்வதேசியசெய்தி ஊடகங்களுக்கும் கிட்டாது தடுக்கும் கைங்கரியத்தில் வெற்றியும்பெற்றிருந்தது அக் கொடும் நாசத்தைப் புரிந்திருந்த ஸ்ரீலங்காவின் காவல் துறை!

அன்றேல் மேற்படி பண்பாட்டுப் படுகொலைக்கு உலகின் கவனத்தை ஈர்ப்பதற்கு சென்னையில் வைத்து ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்ட வேண்டியிருந்தது. எரிந்த நூலகத்தின் ஒளிப் படங்கள் சகிதம் இதற்காக ஒருவர் சென்னைக்கு விரைய வேண்டியிருந்தது.

## அமைதிப் படை

1987ல் இத்தீவில் அமைதியை நிலைநாட்டப் போவதாகக் கூறிக் கொண்டு இங்கு வந்திருந்த இந்திய ஆக்கிரமிப்புப்படைகளும் அதே முன்மாதிரியையே பின்பற்றியிருந்தன. 1987 அக்டோபர் 10ல் தமது 'பவான்' இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்பாக அன்று அதிகாலையில் "ஈழமுரசு", "முரசொலி" பத்திரிகைப் பணிமனைகளை குண்டு வைத்துத் தகர்த்திருந்ததுடன், "ஈழமுரசு" பத்திரிகைப் பணிமனையில் அப்போது கடமையிலிருந்த செய்தியாளர்கள் மற்றும் ஊழியர்களையும் சிறை செய்திருந்தன. 'நிதர்சனம்" தொலைத் தொடர்பு அஞ்சல் கோபுரத்தையும் அதே போல் தகர்த்திருந்தன.

ஆயினும், அவர்களால் அதில் வெற்றிபெற முடியவில்லை: காரணம் "ஈழமுரசு" பத்திரிகை அதன் பணிமனையை இழந்த நிலையிலும் இந்திய ஆக்கிரமிப்புப் படை அறிவித்திருந்த தொடர் ஊரடங்கின் மத்தி

**த. சா. ஆனந்தராசா**

யிலும் யாழ். நகரைக் கைப்பற்றும்வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருந்தது. அநேகமாக அதன் கடைசி இதழ் 1987 அக்டோபர் 23ல் வெளிவந்திருத்தல் வேண்டும்.

## மகாத்மா காந்தி

இந்திய நாட்டின் தேசத் தலைவராக அவர்களால் ஏத்திப் போற்றப்படும் மகாத்மா காந்தியின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட சிலை ஒன்று யாழ். அரசினர் வைத்திய சாலையின் நிர்வாகப் பிரிவின் முன்பாகவுள்ள சந்தியில் இருப்பது தெரிந்ததே! மகாத்மா காந்தியைத் தேச பிதாவாகப் போற்றும் நாட்டின் ஆக்கிரமிப்புப் படைகள் அவரது உருவச் சிலையைத் தானும் பொருட்படுத்தாது அதனைப் பக்கவாட்டால் கடந்து சென்றே மேற்படி வைத்தியசாலையின் நிர்வாகப் பகுதியில் அடைக்கலம் புகுந்திருந்த வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளிகள் உள்ளடக்கிய நூற்றுக்கணக்ானோரைப் படுகொலை செய்திருந்தன இந்தியப்படைகள். அப்போதைக்கு இப்படுகொலைகளை இருட்டடிப்புச் செய்வதில் இந்திய அரசு வெற்றியடைந்ததாகவே மனப்பால் குடித்தது.

## பொய்ப்பிரசாரம்

இத்தகைய செய்தித் திரிப்புக்களை உண்மைச் செய்திகள் போல் வெளியிடுவதற்கென்றே அகில இந்திய வானொலிகூட "அன்புவழி" "நேசக்கரங்கள்", "வெற்றி மாலை" போன்ற விசேட ஒலிபரப்புக்களையும் ஒலிபரப்பி வந்தது இருந்தும் யாழ். அரசினர் வைத்தியசாலைப் படுகொலைகளை அதனால் மூடி மறைக்க முடிந்ததா? "ஈழமுரசு" பத்திரிகையின் கடைசி இதழ் அதன் முன் பக்கத்தில் தானே சம்பவம் நிகழ்ந்த மறு நாளே அதனை அம்பலப்படுத்தத் தவறவில்லை. ஊரடங்கு சட்டத்தின் மத்தியிலும் இடை நடுவே இங்கிருந்து கொழும்பு சென்ற பயணிகள் மூலம் மேற்படி செய்தி சர்வதேசிய செய்தி ஊடகங்களை எட்ட விரைவில் அது உலகப் பிரசித்தமாகியது.

## சாவகச்சேரி படுகொலைகள்

அதுபோன்றே பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டரில் இருந்து சாவகச்சேரி சந்தைப் பகுதியில் இந்திய அமைதிப்படையினர் நிகழ்த்திய படுகொலைச் செய்திகளை "இந்திய ருடே" சஞ்சிகையின் ஒளிப்படப் பிடிப்பாளர் அப்பட்டமாக தமது சஞ்சிகையில் வெளியிட்டிருந்தார் அவருடன் கூடச் சென்றிருந்த "புறொன்ற்லைன்"பத்திரிகையின் இலங்கை நிருபர் டி. பி. ஜெயராஜா அனுப்பியிருந்த செய்தித் திரட்டை மேற்படி சஞ்சிகையோ இருட்டடிப்புச் செய்தும் திரித்தும் வெளியிட்டிருந்தமை வியப்பளிக்காது காரணம் அச் சஞ்சிகையின் ஆசிரியர் ஸ்ரீராமதான் ஜே. ஆர். - ராஜீவ் உடன்படிக்கையின் சூத்திரதாரி என்பதால்!

எத்தனைக்கு எத்தனை போர்க் குற்றச் செயல்கள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றனவோ அத்தனைக்கு அத்தனை விரைவாகவே அவை அம்பலப்படுத்தவும் படுகின்றன. என்பதற்கு இவை எடுத்துக்காட்டு. இந்திரா அம்மையார் தமது நெருக்கடிகால ஆட்சியின் போது தமிழக அரசைக் கலைத்துவிட்டு அதற்குக் கற்பித்த காரணத்தை அடுத்து அவர் படித்துக்கொண்ட பாடம் தமிழகத்தையும் தமிழீழத்தையும் தாயகங்களாகக் கொண்ட தமிழ் மக்கள் உலகின் ஏனைய நாடுகளில் வெறும் சிறுபான்மையினராக இருந்தாலும் உலகில் ஒரு செல்வாக்கு மிக்க சிறுபான்மையினர் என்பதே அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்கின்ற அரும் பெரும் உண்மையை இச் சந்தர்ப்பத்தில் உலகத்தமிழர் மறவாது நினைவில் இருத்துதல் வேண்டும். உலகத் தலைநகரங்களில் அவர்கள் குரல் கொடுத்தால் போதும் செய்தி உலகின் திக்கெட்டும் எட்டிவிடும்.

## தமிழ் ஓசை

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியப்படை ஈழத்தில் அதனது இராணுவ ஆக்கிரமிப்பில் ஈடுபட முன்பு லண்டன் பி.பி.சி. உலக சேவையில் இருந்து முழங்கும் பி.பி.சி தமிழோசை வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று தினங்களில் மட்டுமே ஒலிபரப்பாகி வந்தன. மேற்படி ஒலிபரப்புச் சேவை முதலில் தற்காலிகமாக வாரத்தில் ஆறு நாட்களுக்கும், பின்னர் ஞாயிறு உள்ளடங்க வாரத்தின் ஏழு நாட்களும் விரிவடைய வழி கோலியதும் இந்திய இராணுவம் தமிழீழத்தில் மேற்கொண்ட மேற்படி இராணுவ நடவடிக்கைகள் தாம்,

இதனை மறந்து போகாது உலகத் தமிழ் மக்கள் ஏனைய சர்வதேசிய செய்தி ஊடகங்களையும் தற்போது இருட்டடிப்புக்கு உள்ளாகிவரும் இராணுவ அட்டூழியங்கள் படுகொலைகளை உடனுக்குடன் உலகுக்குத் தெரியப்படுத்தச் செய்வதற்கு தம்மால் ஆனமட்டும் முயலுதல் வேண்டும். அவ்வாறு முயற்சித்தால் கைமேல் பலன் கிட்டும் சந்திரிகா அம்மையாரின் செய்தி இருட்டடிப்பு தவிடுபொடியாகிவிடும். செய்வார்களா?

---

வடமராட்சிப் பகுதியில்

# இடம்பெயர்ந்த மக்களுக்கு இருவார நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கிழக்கு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு இருவார கால இலவச உலர் உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 22ம் திகதிக்கு பின்னர் வடமராட்சி வடக்கு, கிழக்கு பகுதியில் இடம்பெற்ற ஷெல், மற்றும்விமான குண்டு வீச்சு தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு வார கால இலவச உலர் உணவு வழங்கப் படவுள்ளது

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருப்பவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப் பட்டுவருகின்றன. 170-162-இ

---

## இராசி பலன்

28-09-1995

வியாழக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 11]

சதுர்த்தி மாலை 5-35 வரை விசாகம் பி. இ. 1-26 வரை சித்தயோகம். இராகு காலம் பி ப' 1-32 முதல் 3 0 2வரை சுபவேளை: காலை 7-32 முதல் 9-02வரை.

மேஷம்: தவறிழைத்தல், வீண்வாதம், தொழில்கஷ்டம்.

இடபம்: நண்பர் சகவாசம் கலகலப்பு, இனசனஉதவி,

மிதுனம்: பெற்றோர் அறிவுரை, காரியசித்தி, பயண நன்மை.

கடகம்; கருத்துமோதல், பிறர்கோபம், அலைச்சல்.

சிங்கம்: தாழ்ந்த நிலை, தொழில்போட்டி. யோசனை.

கன்னி; முயற்சி பாராட்டு, பணவரவு, தற்பெருமை.

துலாம்: முரண்பாடு, கடமை வழுவுதல், அகாலஉணவு.

விருச்சிகம்: நற்பெயர், பெண்உதவி, நற்காரியம்.

தனுசு; அவசரப் போக்கு, மனத்தாங்கல், பணமுடை.

மகரம்; பெரியோர் பணிவிடை, பணவரவு, பொதுப் பணி.

கும்பம்; சமயோசித போக்கு, தொழில்லாபம், விருந்துண்ணல்.

மீனம்: ஞானப் போக்கு, தொழில்கஷ்டம், அமைதி இன்மை.

— ஜோஸ்யர்

---

## ஓடுகள் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். குருநகரில் உள்ள மது வரி நிலையத்தில் இனம் தெரியாத நபர்களால் நூற்றி ஐம்பது ஓடுகள் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுப்பற்றி மது வரி நிலையப் பொறுப்பதிகாரி தமிழீழக் காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளார். 154

---

## அன்ரனோவ்

(2ம் பக்க தொடர்ச்சி)

ணர் குழு ஒன்று தெரிவித்துள்ளது

அனர்த்தத்தின் போது ஏற்பட்ட தாக்கத்தினால் விமானத்தின் பல பகுதிகள் வேறு வேறாக பிரிந்து கிடக்க காணப்படுகின்றன. ரி

---

உற்பத்திச் சூரியன் உதிக்கட்டும்
தடை இருள்கள் நகரட்டும்

# "வெளிநாடு செல்வதைவிட எமது மண்ணில் பிச்சைஎடுத்து வாழலாம்"

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிற்கு செல்வதை விட எமது மண்ணில் பிச்சை எடுத்து வாழலாம் என்று அண்மையில் வெளிநாட்டிற்கு சென்று திருப்பி அனுப்பப்பட்ட திரு வீரசக்தி சுவலிங்கம் என்பவர் தனது அவலநிலைபற்றி தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நான் 94 ஏப்பிரல் 10-இல் தமிழீழத்திலிருந்து வெளிநாடு செல்வதற்காக லெனின் என்ற முகவர் மூலமாய் மொஸ்கோவிற்கு பயணத்தை மேற்கொண்டு அங்கிருந்து பல முயற்சிகள் செய்து டென்மார்க் செல்வதற்கு எத்தனித்து அங்கு மூன்று மாத காலம் சிறைவாசம் அனுபவித்தேன். இவ்வாறு ஒரு வருடம் கழிந்து மேலும் 30 நபர்களுடன் எனது பயணம் ஆரம்பமானது. இதில் 20 ஆண்களும் 10 பெண்களும் அடங்குவர். எமது பயணம் மீண்டும் மொஸ்கோவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு நாள் புகையிரதப் பயணம் முடிந்து: மீண்டும் பேருந்து வழியாக 3 மணி நேரம் பயணம் செய்து கடைசியில் காட்டுப்பாதை வழியாக நடந்து செல்ல வேண்டியிருந்தது. இப்படி அடர்ந்த காட்டுப் பாதையினூடாகச் செல்லும் பொழுது 3 ஆண்களும் 7 பெண்களும் திசை மாறிச் சென்று பொலிஸில் பிடிபட்டு மீண்டும் மொஸ்கோவிற்கு அனுப்பப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க ஏனைய இருபது பேருடன் பயணம் தொடங்கியது. பகல் இரவாக ஒரு நாள் பேருந்து வழியாகப் பிரயாணம் செய்து 'லித்துவேனியா' என்ற இடத்துக்கு நாம் அனைவரும் அழைத்து வரப்பட்டு பன்றித் தொழுவத்திற்கு கீழ் உள்ள அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தோம். ஒரு மாத காலமாக நாம் மறைமுகமாய் இங்கு வாழ்ந்து வந்தோம். முகவரின் ஆட்கள் இரவு நேரத்தில் மட்டும் எமக்கு பாணும் சோடாவும் வழங்குவார்கள்.

இந் நிலையில் கப்பல் முகவர் ஒருவர் மூலம் நாம் அனைவரும் டென்மார்க் கடலில் இறக்கப்படுகின்றோம். எமக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கப்பல் 20 அடி நீளமான சிறிய கப்பலாகும். இக் கப்பலில் 95 ஜூன் 1ல் அதிகாலை 5மணிக்கு நாம் அனைவரும் ஏற்றப்பட்டு மூன்று பகல் இரண்டு இரவுகள் கழியும்போது சுவீடனுக்கு அண்மையில் எமது கப்பல் பழுதடைந்தது கப்பலைத் திருத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டது ஆனால் பலன் ஏதும் இல்லை. அப்பொழுது புயலுடன் கூடிய பெருமழை பெய்யத் தொடங்கியது.

எமது மாலுமிகள் பரா வெளிச்சத்தைப் பாய்ச்சி கடலில் சென்ற மற்ற கப்பல்களின் அவதானத்தை இங்கு திருப்பி எம்மைக் காப்பாற்றி சுவீடன் நேவியிடமும் செஞ்சிலுவைச் சங்கத்திடமும் எம்மைக் கையளித்தனர்.

விசாரணை மேற்கொள்ளப்பட்டு முடிவில் 14 பேருக்கு தங்குமிட வசதி செய்து கொடுத்துவிட அவர்கள் அனைவரும் தப்பி ஜேர்மனிக்குள் புகுந்து விட்டனர். ஏனையோரை 3 பேர்களாக அங்குள்ள பொலிசாரின் உதவியுடன் கட்டுநாயக்கா விமான நிலையம் கொண்டுவரப்பட்டு அங்கும் இரு நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டோம் என்று தனது சோகக் கதையை கூறி முடித்தார். -ரி

## பதிவு செய்ய கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

பால் கொள்வனவு மற்றும் விற்பனை செய்வோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலின் போது பிரதேச ரீதியாக பாற்சாலைகளை நிறுவி பாலைக் கொள்வனவு செய்தல் மற்றும் மக்களுக்கு சுகாதாரமான முறையில் விற்பனை செய்வது போன்றவற்றை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்துதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன

மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ளாத பாற் கொள்வனவுவாளர்களையும் விற்பனையாளர்களையும் எதிர் வரும் 30ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## டாக்டர்கள் வேலை நிறுத்தம் 48 நோயாளர் மரணம்

(ஹம்பாலா)

உகண்டாவில் வைத்தியர்களும், தாதியர்களும் மேற்கொண்ட ஒரு நாள் வேலை நிறுத்தத்தால் 48 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர் என உகண்டா மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியர், தாதியர்களின் வேலைநிறுத்தத்தினால் ஹம்பாலா வைத்தியசாலையிலிருந்த 48 நோயாளிகளுமே தகுந்த சிகிச்சை இன்றி உயிழந்துள்ளனர்.

மாதம் 4,500 ரூபா வருமானத்தைப் பெறும் வைத்தியர் ஒருவர் தனது மாதவருமானத்தை 45 000 ரூபாவாக சம்பள உயர்வை மேற்கொள்ளுமாறே இவ் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். ர-சி

## வைத்தியசாலைப் பாவனைக்கு எரிபொருள் கிரமமாகக் கிடைக்க நடவடிக்கை

(தெல்லியடி)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளின் பாவனைக்கான எரிபொருட்கள் அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து கிரமமாகக் கிடைக்கும். இதற்கான நடவடிக்கைகளை நான் கொழும்பில் மேற்கொண்டுள்ளேன்.

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை மந்திகை மருத்துவமனையில் நடைபெற்ற உயரதிகாரிகள் கலந்துரையாடலின் போது யாழ். அரச அதிபர் திரு. க பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் ஸ்ரீலங்கா படையினர் கண்மூடித்தனமான முறையில் எறிகணை புக்காரா தாக்குதலை நடாத்தி தமிழ் மக்களையும்: பாடசாலை மாணவ மணிகளையும் கொன்றொழித்து சிலரை கால், கையின்றி முடங்க வைத்துள்ளனர்.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல அரசினர் மருத்துவமனையில் எரிபொருட்களுக்கும், மருந்து வகைகளுக்கும் டாக்டர்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளமையை தெரிந்து கொண்டேன். இதனால் கொழும்பிலிருந்து அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து எரிபொருட்களை கிரமமாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளேன்.

இக் கலந்துரையாடலின் போது யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பிராந்திய சுகாதார மாகாணப் பணிப்பாளர் டாக்டர் வி ஸ்ரீகாந்தா வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் உட்பட பல கிராமச்சேவை அலுவலர்கள், பிரெஞ் வைத்தியக்குழுவினர் மருத்துத்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். நி-160

## 20 லட்சம் பனைவிதை நாட்டுதிட்டம்

[யாழ்ப்பாணம்]

கடந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பாரிய பனை நடுகைத்திட்டமான கற்பகச் சோலைத்திட்டத்தின் கீழ் இவ் ஆண்டு 20 லட்சம் பனை விதைகளை நாட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை, தென்னை வள அபிவிருத்திப்பகுதியினர் திட்டமிட்டுள்ளனர்.

இதன்படி எதிர் காலத்தில் பனந்தொழில் இலகுவாக மேற்கொள்ள வசதியாகவும் இப்பனம் நாற்றுக்களுக்குக்கிடையே ஊடுபயிர்ச் செய்கையை மேற்கொண்டு பயனடையும் நோக்கோடும் இப் பனைவிதை நடுகையை பண்ணை முறையில் அமைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "பாடசாலை இணைப்பை பரிசீலனை செய்க"

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. பெண்கள் பாடசாலையை இரு பகுதியாகப் பிரித்து அதன் பெயரை நீக்கி அங்குள்ள மாணவர்களை சென். ஜோன்ஸ் அக்கடமியில் இயங்கிவரும் இரு பாடசாலைகளுடன் இணைக்க யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு யாழ். ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. பெண்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களால் மகஜர் ஒன்று யாழ். கல்வி வலயம் 1-ன் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. -95

## வெளிநாட்டு

(1ம் பக்க தொடர்ச்சி)

ளூர் செய்தி ஸ்தாபனங்களுக்கு தொடர்ந்து தணிக்கை முறையை அமுல்படுத்தியுள்ளது. ம-சி

## இந்திய

[1ம் பக்க தொடர்ச்சி)

வீழ்த்தும் படி கடுமையான உத்தரவு தற்போதும் நடைமுறையில் இருக்கிறது.

இப்படியான ஒரு சம்பவம் நடைபெற்றது பற்றி தனக்கு புதுடில்லி திரும்பிய பின்பே தெரியவந்தது என்றும் இது பற்றி உடன் விசாரணை நடாத்தும் படியும் அமைச்சர் சாவ்வே பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளார். வீ.சி

## நாளைய பேரணி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டனப் பேரணி ஆரம்பமாகும்.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணி யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி தொடர்ந்து இராமநாதன் வீதி, பலாலி வீதி, அரசடி வீதி கோவில் வீதி வழியாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சென்றடையும்.

இங்கு வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்ட வதிவிடப் பிரதிநிதியிடம் கண்டன மகஜர் கையளிக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து இப் பேரணி கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். மாவட்டச் செயலகத்தைச் சென்றடையும். இங்கு வைத்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விலாசமிடப்பட்ட கண்டன மகஜர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படும்.

சிறிலங்கா அரசு எமது வளங்களையும், வாழ்வையும், உயிர்களையும் அழிப்பது மட்டுமல்லாமல் அதைச் சர்வதேசமட்டத்தில் மறைப்பதற்கும், நியாயப்படுத்துவதற்கும் அதிதீவிரமாக செயற்பட்டு வந்தாலும் வரலாறு மறக்காது, மன்னிக்காது. நாமும் மண்டியிடமாட்டோம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இந்தப் பேரணி அமைய வேண்டும். இதற்குச் சகல துறைசார்ந்த மக்களும் அணிதிரள வேண்டுமென வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் திரு. சூ சிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார். 162-170-சி

## யாழ் குடாவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தப்போரில்ஈடுபட்டு கைகால்களை இழந்த நிலையில் போரில் ஈடுபடமுடியாமலிருக்கும் முன்னாள் ராணுவ வீரர்களை அரசு இனி பொதுமக்களின் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குதலே முறையான நடவடிக்கை எனவும் மனித உரிமைக்கழகம் மேலும் தெரிவித்துள்ளது. (ரி-சி)

## அரசின்

(1ம் பக்க தொடர்ச்சி)

டில் பிரிவினையைஏற்படுத்தும், ஐக்கியத்தைக் குலைக்குமென பௌத்த பிக்குகள் எதிர்ப்பு தெரிவித்திருந்ததை கருத்தில் கொண்டு அரசு தனது அரசியல் தீர்வு யோசனைகளை மறுபரிசீலனை செய்யும் முகமாக சற்றுத்தளர்த்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்திலுள்ள மேலும்பல அம்சங்கள் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ரி-சி

## யழ். குடா

(1ம் பக்க தொடர்ச்சி)

படையினர் மத்தியில் இந்தக் குழப்பம் நிலவுகிறதாம்.

பருவமழை ஆரம்பிக்க முன் குடாநாட்டில் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் அரசு திட்டமிட்டிருந்த போதும் அது தற்போது பின்போடப்பட்டு வருகிறது. தாக்குதலை உடன் ஆரம்பிக்குமாறு ஒரு தரப்பும், அடுத்த வருடமே தாக்குதலை நடாத்த வேண்டுமென மற்றொரு தரப்புமாக இராணுவத்தினரிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

எனினும் இத்தாக்குதல் குறித்து இதுவரை இறுதி முடிவெதுவும் எடுக்கப்படாத நிலையில் பாரிய இராணுவ நடவடிக்கைத் திட்டம் பிற்போடப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இ

## அன்ரனோவின்

(1ம் பக்க தொடர்ச்சி)

டுக் கொண்டிருக்கும் சிங்கப்பூர் குழுவினர் இதை நேற்றுத் தெரிவித்தனர்.

வீடியோ கமெராக்கள் மூலம் எடுத்த படங்களிலிருந்து விமானத்துக்குள் சடலங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. இக்கடல் பிரதேசத்தில் பாரிய மீன்களின் நடமாட்டங்கள் இல்லாததினால் சடலங்களுக்கு சேதம் ஏற்படாது. கடல் கொந்தளிப்பு நேற்று அதிகமாக இருந்ததினால் மீட்பு வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டன. விமானத்துக்குள் எத்தனை சடலங்கள் இருக்கின்றன என்பதை சரியாகக் கூறமுடியாது ஆனால் விரைவில் விமானச் சிதைவுகள் மீட்கப்படுமென்று சிங்கப்பூர் குழுவின் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார். வீ-சி

## தணிக்கை

(1ம் பக்க தொடர்ச்சி)

உரிமை பொது மக்களுக்கு மறுக்கப்படுகிறது.

இது தொடர்பான விவாதம் தற்போது நடைபெற்று வருவதாகவும் இத்தணிக்கை முறையை நீக்கி ஜனநாயகத்தைக் காப்பாற்றுமாறும் கோரியுள்ளது. -சி

## பத்திரிகையாளர்கள்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பத்திரிகையாளர்களும் அரசு சார்பற்ற அமைப்புகளும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

அண்மைக்காலமாக நேபாளத்தில் பத்திரிகையாளர்களுக்கு எதிரான தாக்குதல்களும் மிரட்டல்களும் அதிகரித்து வருவதும் தெரிந்ததே. (சி)

## கல்விக்கூடங்கள்

(1ம் பக்க தொடர்ச்சி)

நாளை நடைபெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணிக்கு முன்னோடியாக பள்ளிச் சிறார்களின் இந்தப் பேரணி இன்று நடைபெறுகிறது.

யாழ். கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் காலை 9.00 மணிக்குத் தத்தம் பாடசாலைகளிலிருந்து புறப்பட்டு பிரதான வீதி, கோவில் வீதி வழியாக யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தை வந்தடைவர் அங்கு இது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறும்.

நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த கொக்குவில், கோண்டாவில் மாணவர்கள் தத்தம் பாடசாலைகளிலிருந்து தாவடிச் சந்தியை சென்றடைந்து அங்கிருந்து கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஊர்வலமாகச் சென்று அங்கு நிகழும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

வண்ணார் பண்ணை பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தத்தம் பாடசாலைகளிலிருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வீதி அரசடி வீதி வழியாக யாழ் இந்து மகளிர் கல்லூரியைச் சென்றடைந்து அங்கு நிகழும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

நல்லூர் அரியாலை பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதி வழியாக முத்திரைச் சந்தையை அடைந்து அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதிவழியாக யாழ்-கனகரத்தினம் ம.ம வித்தியாலயத்தைச் சென்றடைந்து அங்கு நிகழும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இப்பேரணிகளில் ஆண்டு மூன்று தொடக்கம் ஆண்டு ஏழு வரையான மாணவ மாணவிகள் பங்கு பற்றுவர். பாடசாலை, கொடியையும், அரசின் கொடூர நடவடிக்கைகளை கண்டிக்கும் பதாகைகளையும் தாங்கிச் செல்லும் இம் மாணவர்கள் கண்டனக் கோஷங்களையும் எழுப்புவதுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் தத்தம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடமும் மகஜர்களை சமர்ப்பிப்பார்கள்.

வெகுஜன ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் இவ் ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். 170-162.சி

★ தமிழ் மக்கள் மீதான இலங்கை

# அரசின் இன அழிப்பு தாக்குதல்களை சர்வதேசம் தடைசெய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் மீறல் குறித்தும், மனித நேயம் பற்றியும் குரல் கொடுக்கும் சர்வதேசம், சிறிலங்காவின் இவ் வெறித்தனப் போக்கைக் கண்டிப்பது மட்டுமல்லாமல் சிறிலங்காவின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கும் தடைகள் இடவேண்டும். சர்வதேசக் களத்தில் சிறிலங்கா அரசை அம்பலப்படுத்த வேண்டுமென கிராமிய உழைப்பாளர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக் கூடங்கள் மீது அரச படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் மக்கள் மீதான சிறிலங்காவின் இன ஒழிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தீர்வுத்திட்டம் எனப்படும் நாடகமாடிய அதன் சமீபகால செயற்பாடுகள் தற்போது அம்பலப்படுத்தப்பட்டுவருகிறது.

நாகர்கோயில் மகா வித்தியாலய சிறுர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் சிறிலங்கா அரசின் இன வெறிப் போக்கு எத்தகையது என்பதை கோடுகாட்டியுள்ளது. தனது வாழ் நிலையை சுதந்திரத்தை உவகைமிக்க வாழ்க்கையை அடைய மனிதனுக்குள்ள அடிப்படை உரிமையை அரசு காலில் போட்டு மிதித்து வெறியாட்டம் ஆடுகிறது.

பரிதவித்து பாதுகாப்புத் தேடிய பாடசாலை மாணவர் மீதான தாக்குதல் சிறிலங்கா அரசின் இழிநிலையை வெளிகாட்டியுள்ளது. பலியாகிய, அங்கங்கள் சிதறி வீழ்ந்த மாணவர்கள் எமது பிள்ளைகள் அந்த சிசுக்களின் பரிதாப ஓலம், தமிழீழமெங்கும் எதிரொலிக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளது. சி

---

## வட-கிழக்கு பகுதிக்கு தனி அந்தஸ்து வேண்டும்

(கொழும்பு)

இலங்கை மாகாணசபையின் யூனியனாக இருக்கவேண்டுமென்று ஈ. பி. ஆர். எல் எவ். நேற்று ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமைக்கப் படவிருக்கும் மாகாணசபை அரசின் யூனியனில் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு தனி அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்றும் ஈ. பி. ஆர் எல். எவ்பின் பொதுச்செயலாளர் திரு. கே. பிரேமசசந்திரன் ஜனாதிபதியிடம் அறிக்கை மூலம் கோரியுள்ளார்.

சந்திரிகாவுக்கு பிரேமச்சந்திரன் எழுதிய கடிதத்தில் வேறு பல விடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வி-சி

---

## மட்டுநகர் மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

[மட்டுநகர்]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 40ம் கொலனியில் அதிரடிப்பொலிசாருக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

2ம் லெப். பிரசாந்தன் அல்லது உத்தமன் (பூபாலபிள்ளை தவராசா] மட்டக்களப்பு லெப். நவநீதன் ]இளையதம்பி குகன்] மட்டக்களப்பு ஆகிய இருவருமே வீரச்சாவடைந்தவர்களாவர் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்,

இம்மோதலில் படையினர் சிலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. வி சி

---

பேராதனையில்

## மாணவர்கள் வெளியேறினல் மட்டுமே பல்கலைக்கழகம் திறக்கப்படும்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தினுள் அத்துமீறி இருக்கும் 200 மாணவர்களும் வெளியேறும் பட்சத்தில் அடுத்த நான்கு நாட்களில் பல்கலைக்கழகம் திறக்கப்படும். இல்லையேல் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் மூடப்பட்டே இருக்கும்.

இவ்வாறு பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது அது மேலும் தெரிவிக்கையில்:

பல்கலைக்கழகத்தினுள் இருக்கும் மாணவர்கள் அங்கிருந்து வெளியேறுவிட்டால் அவர்களை வெளியேற்ற சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனால் அவர்களின் எதிர்காலமும் பாதிக்கப்படும்

மாணவர்கள் வெளியேறினால் அதன்பின் நான்கு நாட்களில் பல்கலைக்கழகம் திறக்கப்படும். எனினும் உள்ளேயுள்ள மாணவர்கள் அங்கிருந்துவெளியேறமறுத்துவிட்டார்கள்.

'ராக்கிங்' தொடர்பாக ஏழு மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்பட்டதையடுத்து எழுந்த பிரச்னையாலேயே பல்கலைக்கழகம் மூடப்பட்டமை தெரிந்ததே. -சி

---

## மட்டக்களப்பில் ரயிலின் அடியில் குண்டுவெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ரயிலொன்றின் அடியில் வைக்கப்பட்ட குண்டு வெடித்த போதும் ரயிலுக்கு பலத்த சேதம் எதுவும் ஏற்படவில்லையாம்.

ரயிலின் அடியில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததால் ரயில் தண்டவாளமே பலத்த சேதமடைந்ததாகவும் ரயில் பெட்டிக்கு சிறிது சேதமே ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு பகுதியில் ரயில் தண்டவாளங்கள் அகற்றப்படுவது அதிகரித்துள்ளதால் படையினர் தினமும் ரயில் தண்டவாளங்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

---

பொலிஸ் காவலிலிருந்த

## வீரப்பனின் சகோதரனும் இருவரும் விஷமருந்தி தற்கொலை செய்தனர்

[சென்னை]

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனின் தம்பியான அருச்சுனனும் அவனது நெருங்கிய சகாக்களான இருவரும் நேற்று அதிகாலை பொலிஸ் பாதுகாப்பில் இருந்தபோது விஷமருந்தி தற்கொலை செய்துகொண்டனர்.

நேற்று முன்தினம் இவர்கள் மூவரும் மைசூர் பகுதிக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டவேளை இத் தற்கொலைச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிசார் தெரிவித்தனர். அருச்சுனனுடன் ஐயாத்துரை மற்றும் நல்லூர் ரெங்கசாமி ஆகிய இரு சகாக்களுமே இறந்தவர்களாவர்.

இம் மூவருக்கும் எவ்வாறு விஷம் கிடைத்தது என்பது குறித்து ஆராய்வதற்கு கர்நாடக உள்துறை அமைச்சர் ஆர். எம். சிந்தியா அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார். இவர்களது தற்கொலை பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வீரப்பனின் தம்பி அருச்சுனன் கடந்த வருடம் டிசம்பர் மாதம் கோயம்புத்தூரில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. க-சி

---

## வெகுஜன ஒன்றியத்திற்கு சிறிமா, சந்திரிகா கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கையை நிறுத்தி மக்களை அழிவில் இருந்து காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட வெகுஜன ஒன்றியம் சென்ற யூலை மாதம் 9ந்தாம் திகதி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பிவைத்த மகஜருக்கான பதில்கள் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வெகுஜன ஒன்றியம் அனுப்பி வைத்த மகஜர் கிடைக்கப் பெற்றதாகவும் மகஜரில் தாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்குநடவடிக்கை மேற்கொள்ளுவதாகவும் ஜனாதிபதியும், பிரதமரும் யாழ். மாவட்ட வெகுஜன ஒன்றியத் தலைவர் சூ. சிறிலுக்கு அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் கடிதத்தை ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் டார்மினி அமரசிங்கவும், பிரதமரின் கடிதத்தை பிரதமரின் வெளிவிவகார செயலாளர் கீர்த்தி மாவெலகவும் அனுப்பியுள்ளனர். இக்கடிதம் இரண்டும் நேற்று இங்கு வந்து சேர்ந்தன. 170 ஜி

---

## திட்டப் பணிப்பாளர் கொழும்பு பயணம்

### நிலைமைகளை விளக்கிக் கூறுவார்

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் கொழும்புக்கு பயணமானார்.

கிளிநொச்சி சென்ற திட்டப் பணிப்பாளர் அங்கிருந்து கொழும்பு சென்றிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் தற்போது நிலவும் அத்தியாவசிய பிரச்னைகள் தொடர்பாக கொழும்பில் சம்பந்தப்பட்டோருக்கு விளக்கமாக திட்டப்பணிப்பாளர் எடுத்துக் கூறுவார். 170 சி

---

## 65 தொழிலாளர் சுரங்கத்தினுள் பலி

(புதுடில்லி)

பீகாரில் மூன்று நிலச்சுரங்கங்களில் நேற்று ஏற்பட்ட திடீர் விபத்தில் குறைந்தது 65 தொழிலாளர்கள் இறந்துள்ளனர்.

இச்சுரங்கங்களினுள் திடீரென மழை நீர் புகுந்ததினால் இந்த 65 தொழிலாளரும் மூச்சுத்திணறி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. வி.சி

---

## ஜெயலலிதா மீது ரஜனிகாந்த் கண்டனம்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தவறிவிட்டாரென பிரபல திரைப்படநடிகர் ரஜனிகாந்த் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெயலலிதா அரசு ஜனநாயக மரபுகளை மதித்து நடக்க தவறி விட்டதென்றும் குற்றம் சாட்டினர். அரசியலில் தாம் நுழைவது பற்றிக் குறிப்பிட்டபோது உரியநேரத்தில் இது குறித்து தாம் அறிவிப்பதாக தெரிவித்தார்.

நடிகர் ரஜனிகாந்த் விரைவில் அரசியலில் ஈடுபடக்கூடுமென தமிழகத்தில் பரவலாக செய்திகள் அடிபடுவதும் தெரிந்ததே. க-சி

---

## ஒய்வூதிய பற்றுச்சீட்டுகள்

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் மாதத்திற்குரிய உள்ளூராட்சி ஒய்வூதியப் பற்றுச் சீட்டுக்களும் அவற்றிற்குரிய காசோலைகளும் உரிய வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே உள்ளூராட்சி ஒய்வூதியர்கள் நேரடியாக தத்தமது வங்கிகளுக்குச் சென்று ஒய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சி

---

## காசுக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கான ஒரு தொகை காசு உள்ளது அனைவரையும் 30ம் திகதி சனிக்கிழமை காலை 11 00 மணிக்கு பலாலி வீதி கந்தர்மடத்தில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதந்து காசைப் பெற்றுக்கொள்ளுமாறு நிதித் துறையினர் கேட்டுள்ளனர்.

பொ. கணேசலிங்கம் சுகிதா நகைமாளிகை சுன்னாகம் ஞானதேவி செல்லத்துரை அல்லது பிரேமிளா அம்மன் கோவிலடி சுன்னாகம், மனோன்மணி அல்லது மே- ஞானமூர்த்தி கட்டுடை மானிப்பாய், சின்னத்தம்பி கந்தசாமி சுழிபுரம் தெற்கு, பாலசிங்கம் துரைசிங்கம் அல்லது பாலசிங்கம் சந்திராதேவி சுழிபுரம் தெற்கு. திருமதிதெய்வநாயகி கதிர்காமத்தம்பி வட்டு தெற்கு, திருமதி கே. கருணாதேவி சிலும்பிலடி ஏழாலை மேற்குதமயந்தி தேவிசிவபால சுப்பிரமணியம் நாகர்கோவில் மேற்கு. திருமதி ரீ. பாலசிங்கம் சிலும்பிலடி ஏழாலை மேற்கு, திருமதி ரீ. ரஞ்சனாதேவி சிலும்பிலடி ஏழாலை மேற்கு, சின்னப்பு தர்மலிங்கம் மயிலங்காடு ஏழாலை தெற்கு சி

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.